வேண்டிய அத்தனை எழுதுபொருள்கள் மற்றும் ஃபாரங்கள் அனைத்தும் அரசு அச்சகத்தின் மூலமாகத்தான் அச்சடிக்கப்படுகின்றன. அதேபோல உள்ளாட்சித் தேர்தலானாலும், சட்டமன்றத் தேர்தலானாலும், அரசு அச்சகத்தின் மூலமாக அச்சடிக்கப்படுவதால்தான் அவைகள் ஒழுங்காக அச்சடித்துக் கொடுக்கப்படுகின்றன. சில நேரங்களில் அரசு அச்சகத்திற்கு அதிகமான வேலைப்பளு இருந்தால், அவசர காலங்களில் அரசுத் தொடர்புடைய, கூட்டுறவு சங்கத்தினால் நடத்தப்படுகின்ற அச்சகங்களில் அச்சடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 62, டாக்டர் மு. சீனியம்மாள் மற்றும் திரு. தி. சாத்தையா. திரு. தி. சாத்தையா இருக்கையில் இல்லை, டாக்டர் மு. சீனியம்மாள், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

62—

ஜிர்கோனியம் ஸ்பாஞ்ச் திட்டத்திற்கு நிலம் ஒதுக்கீடு

****65298—**டாக்டர் மு. சீனியம்மாள்,*

திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிதம்பரனார் மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் வட்டத்தில், பழையவாயல் கிராமத்தில் மத்திய அரசு ஆரம்பிக்க உள்ள "ஜிர்கோனியம் ஸ்பாஞ்ச்" (Zirconium Sponge Project) திட்டத்திற்கு அரசு எவ்வளவு நிலக்கிரயம் பெற்று நிலங்களை ஒதுக்கீடு செய்துள்ளது ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசால் நடத்தப்படுகிற பிராஜக்ட்டுக்கு மத்திய அரசின் வேண்டுகோளின்படி, அரசு, தனியார் நிலங்களை எடுப்பதிலும், அரசு நிலங்களைக் கொடுப்பதிலும் 1 கோடியே 23 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுத்து கொடுத்தே சிவந்த கரத்துக்கு சொந்தக்காரராக, நானிலம் போற்றும் நல்லாட்சி நடத்துகிற டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் மத்திய அரசால் ஆரம்பிக்கப்படவுள்ள

1995 நவம்பர் 9]

"ஜிர்கோனியம் ஸ்பாஞ்ச்" திட்டத்திற்கு ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ள நிலம் விவசாயம் செய்யக்கூடிய நிலமா அல்லது சாதாரண நிலமா என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு மாநில அரசு நிலம் ஒதுக்கீடு செய்வதால் மத்திய அரசுடன் இணைந்து ஜாயிண்ட் பிராஜக்ட்டாக தொழில் செய்வதற்கு மத்திய அரசு ஆவன செய்யுமாறு வலியுறுத்துமா ? நிலம் கொடுத்த தனியார்களுக்கும், மற்ற நிலங்களைக் கொடுத்தவர்களுக்கும் வேலை கொடுப்பதற்கு ஏதேனும் அரசு ஆவன செய்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பெரிய திட்டம் வரும்போது ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது. அதிலே நஞ்சையும் வரும், புஞ்சையும் வரும். புறம்போக்கும் வரும். அப்படித்தான் மேற்படி திட்டத்திற்காக பலவிதமான நிலங்கள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. அதேபோல, மத்திய அரசினுடைய நிறுவனம் தொழில் அமைக்கும்போது மாநில அரசும், மத்திய அரசும் கூட்டாகவும் தொழிற்சாலை அமைப்பது உண்டு. மத்திய அரசு மட்டும் தொழிற்சாலை அமைப்பதும் உண்டு, தனியார்கள் தொழில் தொடங்கினால் கூட, அதற்கு அரசு, நிலங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறது. அதனாலே நிலங்கள் எடுக்கப்படுவதால் பாதிக்கப்படுபவர்களுக்கு, அதாவது நில உரிமையாளர்களுக்கு அவர்களுடைய ஏழ்மையின் தன்மைக்கு ஏற்றவாறு உதவி செய்யப்படுகிறது. அதேபோல, இன்றைக்கு நெய்வேலி பிராஜக்ட்டு பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். நெய்வேலியில் எடுக்கப்படுகிற கனிமப் பொருள்கள் தமிழ்நாட்டுக்குச் சொந்தம். எனவே நமக்கு அவர்கள் பணம் தர வேண்டும். நெய்வேலி பிராஜக்ட்டுக்காக நிலங்களை அரசு எடுத்தது. அதனால் பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று நாம் சொல்லி இருக்கிறோம். அவர்கள் சிலருக்கு வேலை கொடுக்கிறார்கள். சில சமயங்களில் வேலை கொடுக்காமலும் இருக்கிறார்கள். வேலை கிடைக்காதவர்கள் போராடுகிறார்கள். திருப்பி அது பேசப்படுகிறது. அது தொடர்கதையாகத்தான் எப்போதும் இருக்கும். அது தொடர்கதையாக வரும்போது தேவையான நேரத்தில் அரசு அதைக் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் *10-10*

டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மத்திய அரசு நிறுவனமாக இருந்தாலும் கூட,

தமிழ்நாட்டு மக்களுக்கு ஒருவித பெர்சன்டேஜ் அளவுக்கு வேலை கொடுக்கவேண்டும் என்ற கருத்தை, நமது மாநில அரசின் சார்பாக அவர்களை வலியுறுத்தி, நமது பங்கை நமது மக்களுக்குப் பெற்றுத்தர அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தத் துறைக்குப் பொறுப்பில் இல்லாததால், இதைப்பற்றிப் பூராவும் எனக்குத் தெரியாது. இருந்தாலும், நான் ஏற்கெனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்திருப்பதால், இதைப்போன்ற விஷயத்தில் மத்திய அரசின் தொழில் கொள்கை எப்படியிருக்கும் என்பது தெரியும். எந்தெந்த இடங்களில் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறதோ, அந்தத் தொழிற்சாலையில் உள்ள சாதாரண வேலைகளை அங்கே அந்தப் பகுதி மக்களுக்கே ராயல்டி என்ற அளவிலே அவர்களுக்கே கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசும் சொல்லியிருக்கிறது, மாநில அரசும் சொல்லியிருக்கிறது. அதாவது ரொம்ப நுணுக்கமான பணிகளுக்கு ஆட்கள் எடுக்கிறபோது, அங்கே அந்த வட்டாரங்களில் தகுதியுடையவர்கள் இருந்தால் அவர்களுக்குக் கிடைக்கும். அப்படி அங்கே ஆட்கள் இல்லாவிட்டால் அத்தகைய நுணுக்கமான பணிகளுக்கு இந்தியா முழுவதற்கும் விளம்பரம் செய்து அதைக் கொடுக்க வேண்டுமென்பது தான் இந்தியப் பேரரசின் உள்துறை அமைச்சரின் ஆணை. அதே நேரத்தில், சாதாரண வேலைகளை அந்தப் பகுதி மக்களுக்கே கொடுக்க வேண்டுமென்பதும் மத்தியப் பேரரசின் உள்துறை அமைச்சரின் ஆணை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன் : மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது காம்பன்சேஷன் கொடுக்கும்போது ஏழ்மையின் தன்மையைப் பொறுத்து கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். உதாரணமாக ஒரு ஏழை விவசாயி என்றால், விவசாயத்தைத் தவிர வேறு எந்தத் தொழிலும் அந்த விவசாயிக்குத் தெரியாது. அந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு காம்பன்சேஷன் கொடுப்பதோடு, வேறு ஏதாவது தொழில் பயிற்சியும் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காம்பன்சேஷன் - அதாவது நஷ்ட

ஈட்டைப் பற்றிச் சொல்லவில்லை. நஷ்ட ஈடு என்று கொடுக்கிறபோது, அதனுடைய மதிப்புக்கேற்றவாறு, - அரசு என்ன மதிப்பிடுகிறதோ அந்த மதிப்புத் தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிடமுடியும். அதாவது காம்பன்சேஷனாகக் கொடுத்து விடமுடியும். மற்றபடி வேலை என்று கொடுக்கப்படும்போது, அவர்களுடைய தகுதி அடிப்படையில், அவர்கள் ஏழைகளாக இருந்தால், ஏழ்மை நிலையைப் பார்க்கிறார்கள். அதே நேரத்தில் குடும்பத்தினுடைய நிலைமையையும் பார்க்கவேண்டும். நன்றாகப் படித்தவர்களாக இருந்தால் பெரிய வேலை கொடுப்பார்கள். படிக்கவில்லை என்றால், தகுதிக்கேற்றவாறு லேபர் வேலை கொடுப்பார்கள் என்றுதான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 63, திரு. வெ. தமிழரசு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

63—

ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்டிடம் கட்டுதல்

***22125*—திரு. வெ. தமிழரசு** :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தென்னங்குடிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்தப்பட்ட பின்னும் கட்டுமானப் பணி துவங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் பணி துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தென்னங்குடிபாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம் கட்ட போதுமான நிலம் இன்னும் பெறப்படாத நிலையில் உள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வெ. தமிழரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி இங்கே வருவதற்கு முன்பாக, கடந்த ஒரு மாதத்திற்கு முன்பே, இந்த நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.